www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 52 APRIL 2015

இதழ் - 52 சித்திரை 2015

# ரணில் – மைத்திரி – சந்திரிகா அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமா?



ஜனவரி 8ஆம் திகதி அதிகாரத்துக்கு வந்த புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்துக்கான காலம் முடிவுக்கு வந்துள்ளது. இந்தக் காலகட்டத்துக்குள் நாட்டு மக்களின் நன்மைக்காக அரசாங்கம் செய்யப்போவதாக அறிவித்திருந்த வேலைத்திட்டங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

அரசாங்கம் சாதித்ததெல்லாம் முன்னைய அரசின் முக்கிய தலைவர்கள் மீதும், அந்த அரசில் முக்கிய பதவிகள் வகித்த அதிகாரிகள் மீதும், நூற்றுக்கணக்கில் விசாரணைகள் மேற்கொண்டதும், சிலர் மீது வழக்குகள் தொடுத்ததும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆதரவாளர்களை அரச பதவிகளிலிருந்து நீக்கியதும், பல்வேறு பிரதேசங்களில் அவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டதும்தான்.

அத்துடன் தமது அமைச்சரவையில் 30 பேருக்கு மேல் இடம் பெறமாட்டார்கள் என்று சொன்ன புதிய ஆட்சியாளர்கள், அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக அத்தொகையை இரண்டு மூன்று மடங்காகப் பெருக்கியும் வருகின்றனர்.

அதைவிடப் பாரதூரமான விடயமென்னவெனில், முன்னைய அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் 'மக்கள் வரப்பிரசாத' வரவு செலவுத்திட்டம் ஒன்றை சமர்ப்பித்திருந்த நிலையில், புதிய அரசாங்கம் வரப்போகின்ற பொதுத்தேர்தலை மனதில் வைத்து பிறிதொரு 'மக்கள் வரப்பிரசாத' வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளது. இதன் காரணமாக நாட்டின் நிதி நிலைமை வங்குரோத்தாகி, அதைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் பணத்தாள்களை அச்சடித்து விடுவதற்கான குறுக்கு வழி முயற்சிகளிலும் இறங்கியிருக்கிறது.

இவையெல்லாவற்றையும் பார்க்கையில் 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான்' என்ற முதுமொழிதான் ஞாபகத்துக்கு வருகின்றது.

நாட்டின் இந்த அடிப்படையான பிரச்சினைகளுக்காக தென்னிலங்கையில் ஜனநாயக மற்றும் இடதுசாரி சக்திகள் குரல் எழுப்புவதைக் காண முடிகிறது. இது தென்னிலங்கையில் எந்தச் சூழ்நிலைகளிலும் மாற்றுக்குரல் தொடர்ச்சியாக இருந்து வருவதன் வெளிப்பாடு. உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை, சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவியைப் பயன்படுத்தி புதிய ஜனாதிபதியும், முன்னைய ஜனாதிபதி சந்திரிகாவும் நெருக்கடியில் தள்ளிவிட்டுள்ள போதும், இந்த மாற்றுக்குரல் ஓங்கி ஒலிக்கின்றது.

அதேவேளை, 'திண்ணை எப்போ காலியாகும்?' எனக் காத்திருந்தது போலக் காத்திருந்து, எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமக்குத் தரும்படி

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

நூறு சிந்தனை மலரட்டும்

www.padippakam.com

# எதனை, எதற்காக மறைக்கிறார்கள்?

*சுன்னாகம் நிலத்தடி நீரில் எண்ணெய் கலந்து இருப்பதாகக்கூறி, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி சுன்னாகத்தைச் சேர்ந்த மக்களும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுற்றம் சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் குரல் எழுப்பியும் போராட்டங்களை நடாத்தியும் வருகின்றனர். இதன் உச்சக்கட்டமாக நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் 07.04.2015 இல் உண்ணாவிரதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்தினை கைவிடுமாறு வடமாகாண முதலமைச்சர் வைத்த கோரிக்கையினை மக்கள் நிராகரித்தனர். பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதப்போராட்டம் இரண்டாவது நாளில் கைவிடப்பட்டது. இதற்கு முன்னதாக இவ்வருடம் ஜனவரியில், சுன்னாகம் சிவன் கோவிலிற்கு முன்பாக இதே பிரச்சனையை முன்வைத்து ஓர் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*1995 இல் யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்ட பொழுது அம்மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக, நொதேன் பவர்* (Nothern Power) *என்ற தனியார் நிறுவனம் இலங்கை மின்சார சபையுடன் இணைந்து டீசல் மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கும் செயற்பாடுகளை சுன்னாகத்தில் ஆரம்பித்தது. இந்த மின் பிறப்பாக்கிகளிலிருந்து கழிவாக வெளியேறும் எண்ணெய்களை அப்பகுதி நிலத்திலேயே ஊற்றப்பட்டுள்ளது. இதனால் மின் உற்பத்தி நிலையத்தை அண்டிய பகுதிகளில் கிணற்று நீரில் கழிவு எண்ணெய் கலப்புகள் தென்பட்டன. இதனைத்தொடர்ந்து, 27.01.2015 இல் மல்லாகம் நீதவான் பிறப்பித்த நீதிமன்ற தடையுத்தரவு தீர்ப்பினால் நொதேன் பவர் மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. அதன்பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம், மல்லாகம் நீதவான் பிறப்பித்த இந்த தடையுத்தரவை நிராகரித்துள்ளதால், 06.04.2015 இலிருந்து மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*2014 இல் உடுவில் பிரதேச செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு ஆய்வு நடத்தி சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பில் கழிவு எண்ணெய் படிமங்கள் இருப்பதாகக் கண்டறிந்தது. மின் உற்பத்தி நிலையத்தைச் சூழவுள்ள 3 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கழிவு எண்ணெய் கலந்திருப்பதாக அக்குழு கூறியது. 2015 ஜனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், சுன்னாகம் நிலத்தடி நீரினை ஆய்வு செய்வதற்காக வடக்கு மாகாண சபை ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. அக்குழுவின் முதற்கட்ட பரிசோதனை முடிவுகளின் அறிக்கை செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் யாழ்ப்பாணத்தில் 20.03.2015 இல் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் நிலத்தடி நீரில் உடலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய மாசுக்கள் இல்லையென கண்டறியப்பட்டதாக அக்குழுவினர் தெரிவித்தனர். இதனால் இப்போது சுன்னாகம் நிலத்தடி நீர் மக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததா? இல்லையா? என்பதில் அப்பகுதி மக்களிடையே குழப்ப நிலை காணப்படுகின்றது.*

*உலகில் 88% நோய்கள் அசுத்தமான நீரால்தான் உண்டாகிறதென கூறப்படுகின்றது. ஆனால் 12.04.2015 இல் யாழ் அரச செயலகத்தில் நடைபெற்ற உயர் மட்ட கூட்டம் ஒன்றில் இந்த நிலத்தடி நீர் விவகாரம் குறித்து சுமார் 3 மணித்தியாலங்கள் ஆராயப்பட்டதன் பின்னர், சுன்னாகம் நிலத்தடி நீரில் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய மூலக்கூறு (ஹைட்ரோ காபன்) இல்லையென மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாசுக்கள் இருப்பதாகவும், இறுதி ஆய்வு அறிக்கை வரும் வரையில் பொறுத்திருக்க வேண்டுமென இக்கூட்டத்தில் மேலும் சொல்லப்பட்டுள்ளது. இக்கூட்டம் வடமாகாண ஆளுநர், யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மற்றும் வடமாகாண முதலமைச்சர் ஆகியோர் தலைமையிலேயே நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் பேசிய வடமாகாண முதலமைச்சர், தாம் அழைப்பு விட்டிருந்தவர்களைத் தவிர்ந்த ஏனையோர் கூட்டத்தில் தமது கருத்துக்களைத் தெரிவிக்கமுடியாது என்றும், பார்வையாளர்களாக மாத்திரமே இருக்கலாம் எனக் கூறியுள்ளார். அத்துடன் இக்கூட்டத்திற்கு பத்திரிகையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. இதிலிருந்து இவர்கள் உண்மை எதனையோ மறைக்க முயல்வது தெளிவாகத் தெரிகின்றது. தண்ணீரில் கழிவு எண்ணெயுடன் அரசியலும் மிதக்கின்றது.*

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

## *புத்தாண்டு வாழ்த்துக்கள்!*

***'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் எமது தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.***


படிப்பகம்

www.padippakam.com

# புத்தரும் பௌத்தமும் – ஒரு கண்ணோட்டம்

மிகுந்த மனிதாபிமானமும் இரக்க குணமும் நிறைந்த அரச குமாரன் கௌதமன்... அவர்தான் பின்னர் உலகப் புகழ் பெற்ற புத்தரானார். அவர் இந்தச் சமுதாயக் குழப்பத்தில் துன்ப துயரத்தில் ஒரு ஒழுங்கு முறையைக் கொண்டு வருவதற்கு முயற்சித்தார்.

நிச்சயமாக அவர் செய்த முதல் வேலை வேதங்களில் இருந்த தவறுகளை, பொருத்தமில்லாதவைகளை மறுத்து, அவ்வேதங்களை நிராகரித்ததாகும். அந்த வேதங்கள் அன்று உபநிடத கால பிராமண ஆதிக்கத்தின் மறுக்க முடியாத, ஒதுக்க முடியாத தூண்களாக இருந்தன. மேலும் புத்தர் பிரம்மம், ஆத்மா, சாதி அமைப்பு முறை ஆகியவற்றைக் கடுமையாக எதிர்த்தார்.

***எஸ்.ஜி.சர்தேசாய் - திலிப் போஸ்***

புத்தர் வன்முறைக் கொடுமைகளையும் கடுமையாக எதிர்த்தார். அகிம்சை, அன்பு, கருணை, மனிதாபிமானம் ஆகியவைகளை வலுவாக எடுத்துக் கூறினார். இதன் தொடர்பில் இங்கு குறிப்பிட வேண்டும். புத்தர், யக்ஞங்களையும் சடங்குகளையும் பலிகளையும் கூடக் கடுமையாக எதிர்த்தார். பலிகள் என்பதில் ஆடுமாடுகள், குதிரைகள் முதலியன ஏராளமாகப் பலியிடப்பட்டிருந்தன. அவைகளையெல்லாம் நிறுத்த வேண்டும் என்று புத்தர் கடுமையாக வாதிட்டார். அது ஆடு, மாடுகள், கால்நடைகள் மேய்தலைப் பிரதானமாகக் கொண்ட சமுதாயத்திற்குச் சரியாக இருந்திருக்கலாம், ஆனால் விவசாயத்திற்கும் வாணிபத்திற்கும் மாறியுள்ள சமுதாயத்தில் பலியிடுதல் மிகவும் பெரிய அளவில் பொருளாதார ரீதியில் பாதிக்கும்.

எனவே எந்த அம்சங்கள் எதிர்க்கப்படுகிறதோ அவைகளுக்குப் பதில் மற்றவைகள் வர வேண்டும். சமுதாயம் ஒன்றுமில்லாத வெறுமையில் வாழ முடியாது. அதற்கு ஏதாவது ஒரு வகையிலான பொருளாயத ஆன்மீகப் பிணைப்பு இணைப்புச் சக்தி இருக்க வேண்டும்.

எனவே அதனால் பௌத்தம் யாராலும் உண்டாக்கப்படவில்லை. ஆனால் எப்போதும் அது நிலை கொண்டிருந்திருக்கிறது. இன்னும் அது தொடர்ச்சியாக அதனுடைய மாறும் விதிமுறைகளின்படி மாறிக்கொண்டே நிலை கொண்டிருக்கும் என வலியுறுத்திக் கூறினார்.



மனிதர்கள் முன்பு சமத்துவமாகவும் சகோதரர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பேராசை, வெறுப்பு, வன்முறை, தனிச்சொத்துடைமை முதலிய ஆசைகள் ஏற்பட்டு அதனால் துன்பம், துயரம், வேதனைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று எடுத்துக் காட்டினார்.

எனவே அதற்கு என்ன வழி? முதலாவதாக நாம் தூய்மையான உண்மையான வாழ்க்கை வாழ வேண்டும் என்றார். அதைக் காட்டிலும் முக்கியமானது சங்கங்கள் அமைக்க வேண்டும். அதன் உறுப்பினர்களுக்கு எந்தவிதமான சொத்துடைமையும் இருக்கக்கூடாது. அவர்கள் எல்லாவிதமான சாதி வேறுபாடுகளையும் சமத்துவமின்மையையும் கைவிட்டுவிட வேண்டும்.

பௌத்தம் உபநிடத சமூக – சமயக் கட்டமைப்பைக் காட்டிலும் இன்னும் மற்றுமொரு வகையிலும் மேலானதாக இருந்தது. அதில் அனைவருக்கும் கதவு திறந்து விடப்பட்டிருந்தது. அதில் அனைவரும் சமமானவர்கள். அனைத்து தனி நபர்களுக்கும் தனி நபர்களாகவும் அனுமதிக்கப்பட்டது. மற்ற கட்டமைப்பில் (உபநிடத கட்டமைப்பில்) எந்த ஒரு தனி நபரும் தனியாக இணைய முடியாது. ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சாதியில் பிறந்தவர்கள். அதனால் சூத்திரர்களும் வைசியர்களும் உயர்வு பெற்று பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்கும் சமமாக ஆக முடியவில்லை அந்த அமைப்பில்.

இந்த இலட்சியத்திற்காக புத்தர் மிகவும் கடுமையாகப் பாடுபட்டார். தனது நீண்ட ஆயுட்காலம் முழுவதும் பாடுபட்டார். அவர் இடைவிடாமல் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டேயிருந்தார். தன்னுடைய போதனைகளைக் கூறிக்கொண்டே வந்தார். அப்படியானால் என்ன? இன்று நாம் பாதயாத்திரை, வெகுஜன இயக்கம் எனக் கூறுகிறோம் அல்லவா? அதைத் தவிர வேறு என்ன?

புத்தரைக் காட்டிலும் இன்னும் அதிகமான அளவில் தீவிரமாக இருந்தவர்கள் வேறு சிலரும் இருந்திருக்கிறார்கள். அஜித் கேஸா கம்பளி என்பவர் ஒருவர் இருந்தார். மற்றும் லோகாயதர்கள் இருந்தார்கள். அவர்கள் தத்துவஞானத் துறையிலும் சாதி அமைப்பை நிராகரிப்பதிலும் சரி புத்தரைக் காட்டிலும் அதிக தீவிரமாகவும் துணிவாகவும் இருந்தார்கள்.

புத்த சமயம் ஒரு வெகுஜன மதமாக இந்தியாவில் எப்போதும் ஆகவில்லை. ஆனால் வேத – உபநிடத – பிராமண மதத்தின் சமூக, சித்தாந்த, ஆன்மீக ஆதிக்கத்தை வலுவாகக் குலுக்கி ஆட்டி அசைக்கும் அளவுக்கு மிகுந்த சக்தி வாய்ந்ததாக ஆயிற்று. உபநிடத மதம், அதன் பழைய செம்மொழி சால் வடிவத்தில் இந்தியாவில் மீண்டும் மீட்சி பெற்று வரவில்லை.

புத்த மதத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களை நாம் ஆராய


படிப்பகம்

www.padippakam.com

வேண்டியதிருக்கிறது. அது நமது பாடப் பொருளுக்கு அவசியமாகிறது. அது பற்றிச் சுருக்கமாக இங்கு குறிப்பிடலாம்.

முதலாவதாக, புத்தர் சங்கங்களை அமைத்து செயல்பட்டார். அந்தச் சங்கத்தில் சாதிகள் இல்லை. தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை. இத்தகைய சங்கங்கள் கற்பனாவாதக் கருத்தாக செயலாகப் போய்விட்டது. எனவே அதற்கு இதர கற்பனாவாத செயல்களுக்கு ஏற்பட்ட கதியே ஏற்பட்டது. எனவே அவை அந்தக் காலத்து வரலாற்று நிலைமைகளின் அடிப்படையில் அமையவில்லை.

இரண்டாவதாக, புத்தரும் பல்வேறு விசயங்களில் பிரச்சினைகளில் சமரச நிலையை எடுத்தார். அவருடைய மதம் தெளிவாகவே நாத்திகத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. தெளிவாகவே பொருள்முதல்வாதத்தின் பக்கமே சாய்ந்திருந்தது. அது தனது தத்துவார்த்தக் கூறுகளை நீண்ட நாட்களுக்கு உறுதியாக நிலை நிறுத்திக் கொள்ள முடியவில்லை. கடவுள், மதம், மூட நம்பிக்கை, மோட்சம், மீட்சி பெறுவதற்கான ஆக்கிரகம், ஏக்கம், ஆவல், இவையெல்லாம் இயற்கைச் சக்திகளுக்கு முன்னால் மனிதன் நிற்க முடியாமல் உள்ள பலவீனத்தின் விளைவுகளாகும். பிரதானமாக, சுரண்டும் கூட்டத்திற்கு எதிராகத் தாள முடியாமல் இருந்த சுரண்டப்படும் கூட்டத்தின் பலவீனமாகும். அடக்கி ஒடுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கு முன்பாக உழைக்கும் மக்கள் நிற்க முடியாமல் இருந்த பலவீனமாகும்.

இத்தகைய சூழ்நிலைமைகள் இருக்கும் வரை கடவுளோ, மூட நம்பிக்கைகளோ அல்லது மதமோ மறையாது. உண்மையில் உழைக்கும் மக்கள் சமுதாய விடுதலை பெற்ற பின்னரும் கூட, இயற்கையின் மீது மனிதனுடைய பிடிப்பும் ஆதிக்கமும் கணிசமான அளவில் அதிகரித்த பின்னரும் கூட, பொதுவாக சமுதாய வாழ்க்கையில் ஒரு விஞ்ஞானக் கண்ணோட்டம் வளர்ந்த பின்னரும் கூட, கடவுளும் மதமும் உதிர்ந்து போவதற்கு வெகுநாட்கள் ஆகிவிடுகிறது. சோசலிச நாடுகளின் அனுபவங்கள் இது நீண்ட கடினமான வளர்ச்சிப் போக்காக இருக்கிறது என்பதை நிரூபித்திருக்கிறது.

மூன்றாவதாக, இந்தியாவில் சாதி அமைப்பு முறை ஒரு காலத்தில் ஒரு சமுதாய, மத, பொருளாதார அமைப்பு முறையாக இருந்திருக்கிறது. நவீன தொழில்முறை கூட சாதி அமைப்பு முறையைப் பலவீனப்படுத்தியிருக்கிறதே ஒழிய அது சாத்தியமே படவில்லை. அந்தச் சாதிக் கோட்டையை வலுவாகத் தாக்கியதில் புத்தம் மழுங்கியதே தவிர சாதிக்கோட்டை தகரவில்லை.

கடைசியாக எல்லா மதங்களையும் போலவே புத்த மதமும் சொத்துடைமைக்காரர்களுக்கும் பிரபுக்களுக்கும் அரசியல் அதிகாரத்திற்கும் கீழடங்கி முடிவுக்கு வந்துவிட்டது. உண்மையில் புத்த மதக் குருக்களே கூட, ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கி உருண்டு புரண்டு விட்டார்கள். புல்லுருவி வாழ்க்கையில் சீரழிந்துவிட்டார்கள்.

புத்த குருமார்கள் புத்தரையே கடவுள் அவதாரம் என்று மாற்றிவிட்டார்கள். நாத்திக மதத்தின் கதவுகள், மந்திர தந்திரங்களுக்கும் விக்கிரக ஆராதனைக்கும், குறளி வித்தை, குட்டிச்சாத்தான் வித்தைகளுக்கும் வழி திறந்து விட்டன. ஒரு விசயத்தை புத்த மதம் நிலைநிறுத்தி விட்டது. அது படிப்பறிவில்லாத ஏழை எளிய மக்களுக்கு வீடுபேறு அடைவதற்கான நம்பிக்கையைக் கொடுத்தது. அந்த வாய்ப்பை உபநிடத சமுதாயம் அவனுக்கு மறுத்தது என்பது மட்டுமல்ல, அது அவனை மனிதனாகவே ஏற்றுக் கொள்ளவில்லை.

(இந்தக் கட்டுரை எஸ்.ஜி.சர்தேசாய் மற்றும் திலிப் போஸ் ஆகிய இருவரும் கூட்டாக எழுதிய 'மார்க்சியமும் பகவத் கீதையும்' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டதாகும். நூல் ஆசிரியர்கள் இருவரும் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களும், மார்க்சிச அறிஞர்களும் ஆவர். கட்டுரைக்கான தலைப்பு எம்முடையதாகும் – வானவில்) *

# ஸ்டாலினின் கம்பீரத்தால் தீர்மானத்தை மறந்த தலைவர்கள்!

இரண்டாம் உலகப் போரை ஜேர்மானிய சர்வாதிகாரி ஹிட்லர் துவக்கிய போது, அவனது நோக்கம் சோவியத் ரஸ்யாவை அழிப்பதுதான் என நினைத்து அமெரிக்காவும், பிரித்தானியாவும் அவனுக்கு கொம்பு சீவிவிட முயன்றன. ஆனால் அவன் இந்த இரு நாடுகளினதும் நேச நாடுகளான ஐரோப்பிய நாடுகளை முதலில் தாக்கியதுடன், பிரித்தானியாவிலும் கை வைத்தான். அதன் பின்னரே அமெரிக்காவும் பிரித்தானியாவும், சோவியத் யூனியனுடன் இணைந்து அவனை எதிர்க்க முடிவு செய்தன.

மூன்று நாட்டுத் தலைவர்களும் இதுசம்பந்தமாகச் சந்தித்துப் பேசத் தீர்மானித்தனர். சந்திப்பு நிகழ இருந்த இடத்தில் குண்டு வைத்து மூன்று தலைவர்களையும் கொல்ல ஹிட்லரின் உளவு அமைப்பான எஸ்.எஸ். திட்டம் தீட்டியிருந்ததை சோவியத் யூனியனின் உளவுப் பிரிவு அறிந்து கொண்டது. அதனால் சந்திப்பு இறுதி நேரத்தில் ஒரு சோவியத் யுத்தக் கப்பலுக்கு மாற்றப்பட்டது.

சந்திப்புக்கு என நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்கு சற்று முன்னதாகவே அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வேல்ட்டும், பிரித்தானிய பிரதமர் வின்சன் சேர்ச்சிலும் கப்பலுக்கு வந்துவிட்டனர். ஸ்டாலினை அவர்கள் முன்னொருபோதும் சந்தித்திருக்கவில்லை. ஸ்டாலின் அவர்களுக்குப் பிடிக்காத உலகின் முதலாவது சோசலிச நாட்டின் தலைவராக இருந்ததால், அவர் வரும்போது அவருக்கு மரியாதை எதுவும் கொடுப்பதில்லை என இருவரும் தீர்மானித்திருந்தனர்.

கூட்டம் தொடங்குவதற்கு ஒரு நிமிடம் முன்னதாகவே ஸ்டாலின் அறைக்குள் பிரவேசித்திருக்கிறார். அவரின் கம்பீரத்தைக் கண்டவுடன் ரூஸ்வேல்ட்டும் சேர்ச்சிலும் தமது தீர்மானத்தை மறந்து தங்களை அறியாமலே எழுந்து நின்று அவருக்குக் கைலாகு கொடுத்து வரவேற்றிருக்கின்றனர்!

*(இது 20ஆம் நூற்றாண்டில் சர்வதேசரீதியாக நிலவிய ஒரு சுவாரசியமான கதை)* *



படிப்பகம்

www.padippakam.com

# வட மாகாணசபையினதும் முதலமைச்சரதும் திட்டமிட்ட அரசியல் கபட நாடகம்!




தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருக்கும் வட மாகாணசபை இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்துள்ளதாகவும், அது சம்பந்தமாக சர்வதேச சமூகம் தகுந்த விசாரணை நடாத்தி அதற்குப் பொறுப்பானவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் எனக் கோரி சமீபத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

இந்தத் தீர்மானம் திடீரென வந்த ஒன்று அல்ல. இந்தத் தீர்மானத்துக்கான முன்னறிவித்தலை மாகாணசபை உறுப்பினரும், இனப்பற்று என்ற விசம் அளவுக்கு அதிகமாக தலைக்கேறி சன்னதம் ஆடுபவருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கடந்த ஆண்டே கொடுத்திருந்தார். அப்பொழுது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கொஞ்சமும் பிடிக்காத மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தார். அவர்தான் தமிழர்களை இனப்படுகொலை செய்த சூத்திரதாரி என கூட்டமைப்பு குற்றம் சாட்டியும் வந்தது.

அதன்பின்னர் இவ்வருடம் ஜனவரி 8 இல் ஜனாதிபதித் தேர்தல் நடந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்த மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக வந்ததுடன், கூட்டமைப்பினருக்கு மிகவும் பிடித்த ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் அமைந்துவிட்டது. புதிய அரசாங்கத்தில் கூட்டமைப்பு மந்திரிப் பதவி எதனையும் பெறாதுவிட்டாலும், அரசாங்கம் அமைத்துள்ள 'தேசிய நிறைவேற்று சபை' என்ற அமைப்பில் அங்கம் வகிப்பதன் மூலம் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை எடுப்பதில் கூட்டமைப்பும் பங்குபற்றி வருகிறது.

புதிய அரசாங்கம் சில முக்கியமான வேலைகளைச் செய்வதற்கு என அறிவித்திருந்த 100 நாள் வேலைத்திட்டக் காலம் ஏறத்தாள முடிவுக்கு வந்துவிட்டது. இந்த நிலைமையில் தாம் ஆதரித்து, அதன் மூலம் பதவிக்குக் கொண்டுவந்த புதிய அரசாங்கத்துக்கு குறைந்தபட்சம் 100 நாள்கள் அவகாசம் கூடக் கொடுக்காது, அதற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் கிடப்பில் இருந்த சிவாஜிலிங்கத்தின் தீர்மானத்துக்கு வட மாகாணசபையில் வடிவம் கொடுத்து திடீரென நிறைவேற்றியது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கும். அதுவும் முதலமைச்சர் விக்னேஸ்வரனே அதை முன்மொழிந்தும் இருக்கிறார்.

**சமரன்**

தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும், முதலமைச்சர் விக்னேஸ்வரனினதும் இந்த திடீர் நடவடிக்கை எதற்காக எனக் கூட்டமைப்பு ஆதரவாளர்களே சற்றுக் குழம்பிப் போய் இருக்கிறார்கள். சரி 'எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தால் என்ன, எமது நோக்கம் தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்டி அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதுதான்' என கூட்டமைப்பினர் 'றீல்' விடுவார்களாக இருந்தால், அது சம்பந்தமாகவும் சில கேள்விகள் அவர்களிடம் கேட்க வேண்டியுள்ளது. அதுவும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியான ஒருவரே வட மாகாண சபையின் தலைமை அமைச்சராக இருக்கையில் அவர் வழங்கும் நீதி பக்கம் சாராது நிலைநாட்டப்பட வேண்டியது இன்றியமையாதது.

அப்படிப் பார்த்தால், இலங்கை அரச படைகள் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை செய்தது என்றால்,இந்தியாவின் அமைதிப்படை இலங்கை மண்ணில் புலிகளுடன் சமரில் ஈடுபட்டிருந்த போது அப்பாவி தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட கொலைகள் எந்த வகையானவை? அவைகள் இனப்படுகொலை இல்லையா? புலிகள் கூட அந்த நேரத்தில் சுவர்களில் எழுதிய ஒரு சுலோகத்தில் 'கோட்ஸே காந்தியைக் கொன்றான். ஆனால் ராஜீவ் காந்தியோ காந்தீயத்தையே கொலை செய்துள்ளான்' என எழுதினார்கள். புலிகளினால் உருவாக்கப்பட்டு, அவர்களே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று அறிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தனது மாகாணசபைத் தீர்மானத்தில் இந்திய அமைதிப்படை செய்த படுகொலைகளையும் குறிப்பிட்டிருக்க வேண்டும் அல்லவா? ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாது பக்கச்சார்பாக நடந்து கொண்டுள்ளார்கள்.

அதுமாத்திரமல்லாமல், நீதியின் தராசைச் சரியாகப் பிடிப்பதானால், அதுவும் முன்னாள் நீதிபதியான முதலமைச்சர் அதைப் பிடிக்கும்போது பக்கம் சாராமல் சமநிலையாகப் பிடிக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் புலிகள் இத்தனை வருடங்களிலும் தமிழ் மக்கள் மீது

www.padippakam.com




நடாத்திய படுகொலைகளையும் கண்டித்தே ஆக வேண்டும். தமிழ் அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், தொழிற்சங்கவாதிகள், மதத் தலைவர்கள், அரச நிர்வாகிகள், சக போராளிகள் என பல்லாயிரக்கணக்கானோரை புலிகள் கொன்று குவித்தனரே அதைப்பற்றி ஏன் வட மாகாணசபையின் தீர்மானத்தில் வாயே திறக்கவில்லை. இறுதி யுத்த காலத்துக்கு முன்னரே புலிகள் சுமார் 30,000 (முப்பதினாயிரம்) தமிழ் மக்கள் வரை கொலை செய்துள்ளார்கள் என்ற ஒரு கணிப்பீடு கூட இருக்கிறது.

அரச படைகளின் இறுதி யுத்தப் படுகொலைகள் பற்றி அடிக்கடி பேசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், அதே இறுதி யுத்த நேரத்தில் தாம் மனிதக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் குண்டுத் தாக்குதலில் இருந்து தப்பியோட முற்பட்ட போது புலிகள் அவர்களை துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்ததை நேரில் பார்த்த எத்தனையோ சாட்சிகள் இருக்கிறார்கள். புலிகள் அப்பாவிப் பொதுமக்களைத் தாமும் சுட்டுக் கொன்றது மட்டுமின்றி, பலவந்தமாக அவர்களைப் தமக்குப் பாதுகாப்புக்காகப் பிடித்து வைத்திருந்து அரச படைகளின் தாக்குதலிலும் உயிரிழக்க வைத்துள்ளார்கள். எனவே இறுதியுத்த நேர மக்களின் வகைதொகையற்ற உயிரிழப்புகளுக்கு புலிகளே அடிப்படைக் காரணகர்த்தாக்கள் என்பதே உண்மை. இதுபற்றி வட மாகாணசபைத் தீர்மானம் ஏன் மௌனம் சாதிக்கிறது?

உண்மை என்னவெனில் இந்தத் தீர்மானத்தை அவசரம் அவசரமாக நிறைவேற்றியதின் நோக்கமே வேறு. தற்போது ஆட்சியில் அமர்ந்துள்ள ஐ.தே.க அரசாங்கம் சட்டப்படியான அரசாங்கமோ, பெரும்பான்மை பலம் உள்ள அரசாங்கமோ அல்ல. எனவே தவிர்க்க முடியாதபடி ஒரு சில மாதங்களில் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடாத்த வேண்டிய நிர்ப்பந்தம் புதிய ஜனாதிபதிக்கு உள்ளது. எனவே ஒரு தேர்தல் நடைபெற்றால் இன்றுள்ள சூழ்நிலையில் ஐ.தே.கவுக்கு மட்டுமின்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அது ஒரு விசப்பரீட்சையாக இருக்கப் போகின்றது. எனவே தாம் ஆதரித்து பதவிக்குக் கொண்டு வந்த அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பதாக இருந்தபோதும், தம்மைப் பாதுகாக்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலையிலும் கூட்டமைப்பு இருக்கிறது.

அதற்குக் காரணம் புதிய ஜனாதிபதியாகத் தெரிவான மைத்திரியை எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமலே கூட்டமைப்பு ஆதரித்தது. எடுத்ததிற்கெல்லாம் மகிந்த ராஜபக்சவின் முன்னைய அரசாங்கத்துடன சண்டை போட்டுக் கொண்டிருந்த கூட்டமைப்பு, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாக மைத்திரியிடம் எவ்விதமான வாக்குறுதியும் பெறாமல் அவரை ஆதரித்தற்கான காரணம் என்ன என்ற பெரியதொரு கேள்வி தமிழ் பொதுமக்களிடம் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், புதிய அரசாங்கம் மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்குவதாகவோ, வடக்கில் இருந்து இராணுவத்தை அகற்றுவதாகவோ, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகவோ, காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துத் தருவதாகவோ அல்லது கூட்டமைப்பு இதுமாதிரி முன்வைத்து வந்த கோரிக்கைகள் சம்பந்தமாகவோ இதுவரை சாதகமான சமிக்ஞை எதையும் காட்டவுமில்லை.

இப்படியான ஒரு கையறு நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒருபுறம் இருக்கையில், எப்படியும் புதிய அரசில் பதவி சுகம் அனுபவித்துவிட வேண்டும் என ஆவலாதிப்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், அவருக்கு ஜால்ரா போடும் நியமன எம்.பி சுமந்திரனும் அரசாங்கம் நடாத்திய இவ்வருட சுதந்திர தின விழாவில் பங்குபற்றியதின் மூலம் இதுவரை காலமும் தமிழ் தலைமைகள் கடைப்பிடித்து வந்த சுதந்திர தினப் பகிஸ்கரிப்பு என்ற நாடகத்தைக் கேலிக்கூத்தாக்கியுள்ளனர். அதன் காரணமாக அவ்விருவரினதும் கொடும்பாவிகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழ் தேசிய உணர்வாளர்களால் எரிக்கப்பட்டும் உள்ளன.

இவையெல்லாம் சேர்ந்து அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களிடம் என்ன விடயத்தைச் சொல்லி வாக்குக் கேட்பது என்ற தர்மசங்கட நிலையை கூட்டமைப்புக்கு உருவாக்கியுள்ளது. அதற்கு ஒரு தீர்வாகக் கண்டு பிடிக்கப்பட்டதும், கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டதுமே வட மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட சிவாஜிலிங்கம் முன்மொழிந்த 'இனப்படுகொலை' தீர்மானம். அது போலியான, மக்களைத் திட்டமிட்டு ஏமாற்ற என நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பதை அதை நிறைவேற்றியவர்களே அம்பலப்படுத்தியும் விட்டனர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தீர்மானத்தை நிறைவேற்றவிட்டு, பின்னர் அதன் சாரத்தையும் காரத்தையும் குறைப்பதற்காகவும், அரசாங்கத்தைத் தாஜா செய்வதற்காகவும், அந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதின் நோக்கம் வேறொன்றும் இல்லை, தமிழ் மக்களின் நிலைமையை உலகறிய வைப்பதற்குத்தான் என்கிறார். பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், அந்தத் தீர்மானம் கொண்டு வந்தது இறுதி யுத்தத்தை நடாத்திய முன்னைய மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை விசாரிப்பதற்காகத்தான் என்கிறார்.

எதுஎப்படியோ, முன்னாள் நீதவானும் அவரது சகாக்களும் சேர்ந்து அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைத்து, அவர்களை அடிமுட்டாள்களாக்கி, அவர்களது வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்கு இந்த இனப்படுகொலைத் தீர்மானத்தின மூலம் பிள்ளையார் சுழி போட்டுவிட்டார்கள்.

வட மாகாணசபையின் பருப்பு தமிழ் மக்களிடம் அவியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். *


படிப்பகம்

www.padippakam.com

# ஊடகங்களுக்கு சம்பந்தன் விடுத்த எச்சரிக்கை!



இலங்கையின் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும், வடக்கு மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் 'பனிப்போர்' ஒன்று நிலவி வருவதாக ஊடகங்கள் சிலாகித்து வருகின்றன. இந்தப் பிரச்சினை வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது சம்பந்தமாக ரணில் தெரிவித்த ஒரு கருத்துச் சம்பந்தமாக உருவானது என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வடக்கிலிருந்து இராணுவத்தைப் பெருமளவு குறைத்து, அவர்கள் வசம் இருக்கும் பொதுமக்களின் காணிகளை உரியவர்களிடம் கையளிக்கப் போவதாக ரணில், இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா உட்பட எதிரணியினர் மக்களுக்கு வாக்குறுதி அளித்தனர்.

இதுவும் இன்ன பிற காரணங்களுக்காகவும்தான் தாம் மைத்திரியை ஆதரிப்பதாகச் சொல்லியே முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஜனாதிபதி தேர்தலில் மைத்திரியை ஆதரித்தது.

ஆனால் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது நடைமுறைச் சாத்தியமில்லாதது என்பதை இந்த இரண்டு பகுதியினரும் நன்கு அறிவார்கள். அதைத் தெரிந்து கொண்டே மக்களை ஏமாற்றப் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசினர். ஆனால் இப்பொழுது ரணில் சிங்கள மக்களையும், இராணுவத்தையும் தம்மை நம்ப வைக்கவும், எதிர்க்கட்சிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பவும் வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்ற முடியாது என்கிறார்.

அதேபோல, "மைத்திரியை தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பிரயோசமும் இல்லாமல் ஏன் ஆதரித்தீர்கள்?" என்ற தமிழ் மக்களின் கோபாவேசமான கேள்வியிலிருந்து தப்புவதற்காக ஏதாவது ஒரு நாடகம் போட வேண்டிய தேவை முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இருக்கிறது. அதற்கும் அப்பால் "நீங்கள் முதலமைச்சராக நான்கு வருடங்கள் இருந்து என்னத்தை வெட்டிக் கிழிச்சனீங்கள்?" என்ற தமிழ் மக்களின் இன்னொரு கேள்விக்கு நான்கு வருடங்களுக்குப் பின்னர் பதில் சொல்ல வேண்டிய தேவையும் விக்னேஸ்வரனுக்கு இருக்கிறது. இந்தக் கேள்வியை விக்னேஸ்வரனுடன் இன்னொரு 'பனிப்போரை' நடாத்தி வரும் மாவை சேனாதிராசா கூட சில வேளைகளில் கேட்கக்கூடும்!

அதுமட்டுமின்றி, சம்பந்தனுக்குப் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை சுவீகரிப்பதற்கு காத்துக் கொண்டிருக்கும் விக்னேஸ்வரன் தன்னை ஒரு 'பயில்வான்' எனத் தமிழ் மக்களுக்குக் காட்ட வேண்டிய தேவையும் இருக்கிறது.

இந்த இரு பக்கத் தேவைகளையும் மனதில் கொண்டு உருவாக்கப்பட்ட நாடகம்தான் ரணில் – விக்னேஸ்வரன் இடையிலான 'பனிப்போர்' என்பதை இந்த இரு தரப்பினரதும் வரலாற்றை நன்கு அறிந்தவர்கள் புரிந்து கொள்வர்.

இது ஒருபுறமிருக்க, இவர்களது 'பனிப்போர்' குறித்து அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேள்வி எழுப்பிய போது, அவர் கொடுத்த பதில் சம்பந்தனின் உண்மையான சுயரூபத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

அவர் தனது பதிலில் ஊடகங்களுக்கு கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். இது தங்களுடைய உட்கட்சிப் பிரச்சினை என்றும், இதில் ஊடகங்கள் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்!

"என்னய்யா, நாட்டின் பிரதமருக்கும், தமிழ் மக்களின் முக்கியமான ஒரு பகுதியின் முதலமைச்சருக்கும் இடையில் உருவாகியுள்ள "மோதல்' உட்கட்சி விவகாரமா? கடந்த காலத்தில் மகிந்த அரசின் கீழ் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் நசுக்கப்படுகிறார்கள் என ஐ.தே.க அணியினருடன் சேர்ந்து கூப்பாடு போட்ட நீங்கள், இப்பொழுது உங்கள் பிரச்சினையில் மட்டும் ஊடகங்கள் மௌனமாக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுவது என்ன விதமான ஊடக தர்மம் அல்லது சுதந்திரம்?" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

அத்துடன் ரணிலுக்கும்

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க..


படிப்பகம்

www.padippakam.com

## ஊர்காவற்துறையில் 5,000 படகுகள்!

**எ**ன்னுடைய முதல் சுற்றுச்செலவுகள் நான் சிறுவனாக இருந்த காலத்திலேயே தொடங்கின. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் (1919) என் அன்னையாருடன் ஊர்க்காவல் துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற நினைவு மிகவும் தெளிவாக இன்றும் எனக்கு உளது. அக்காலத்தில் பொறிவண்டிகள் எங்கள் பகுதியில் இல்லை. எனவே யாழ்ப்பாணப் பட்டினத்திற்குச் செல்லும் மக்கள் சிறு படகில் (மச்சுவா என்று சொல்வார்கள்) ஏறி, மூன்று மணித்தியாலம் பிரயாணஞ் செய்து யாழ்ப்பாணத் துறைமுகத்தில் இறங்குவர். ஊர்க்காவல் துறை அக்காலத்தில் பெரும் துறைமுகமாக விளங்கியது. வேற்றுநாடு செல்லும் மரக்கலங்கள் ஏறக்குறைய ஐயாயிரம், அத்துறைமுகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன. எண்ணிறந்த படகுகளும் கப்பல்களும் அவ்வழகிய கடற்பரப்பில் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்ததை நான் கண்டிருக்கிறேன்.

'தவத்திரு தனிநாயக அடிகளாரின் படைப்புகள்' என்ற நூலிலிருந்து

## கோயில்களில் குட முழுக்கு விழா எதற்காக செய்யப்படுகிறது?

பொதுவாக நமது சைவக் கோயில்களில் 12 வருடங்களுக்கு ஒருமுறை 'குட முழுக்கு' என்று ஒரு விழா செய்வது வழமை. அதற்குக் காரணம் என்னவென பலருக்குத் தெரியாது. அந்தக் கோயிலில் குடிகொண்டிருக்கும் தெய்வத்துக்குச் செய்யும் ஒருவகைப் பரிகாரம் என்றுதான் பலரும் அதைக் கருதுகின்றனர். ஆனால் அதற்கு ஒரு விஞ்ஞானபூர்வமான காரணம் இருக்கிறது என 'மங்கையர் மலர்' இதழில் மதுரையைச் சேர்ந்த என்.சாந்தினி என்பவர் எழுதியிருக்கிறார். அது வருமாறு:

"கோயில்களில் கோபுர உச்சியில் தங்கம், வெள்ளி, செம்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களில் தானியங்கள், குறிப்பாக வரகு நிறையக் கொட்டப்படும். ஏன் தெரியுமா? வரகிற்கு இடி, மின்னலைத் தாங்கும் ஆற்றல் உண்டு. எனவே சிறந்த இடிதாங்கியாகச் செயல்படுகிறது. கோபுரத்தின் உயரம் 50 மீட்டர் என்றால், இது 7,500 மீட்டர் பரப்பளவுக்கு இடி, மின்னலைத் தடுப்பதால், அந்த எல்லைக்குள் இருப்பவர்களை இடி, மின்னல் தாக்காது. 'கோயில்கள் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பதற்கான அறிவியல் காரணம் இதுதான். இந்த தானியங்களுக்கு 12 வருடங்களுக்குத்தான் இந்த சக்தி இருக்கும். எனவே தான் 12 வருடங்களுக்கு ஒருமுறை 'குட முழுக்கு விழா' என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்களை அகற்றி, புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது. ஒவ்வொரு சம்பிரதாயமும் அறிவியல் ரீதியாக அர்த்தமுள்ளது என்பது ஆச்சரியத்துக்குரியது."




## மலையேறும் வான்புகழ் வள்ளுவனின் குறள்கள்!

**வ**ள்ளுவர் இயற்றிய 1330 குறள் பாக்களையும் மலைகளில் நிரந்தரமாகச் செதுக்கி வைப்பதற்கு தமிழ்நாட்டிலுள்ள 'குறள்மலைச் சங்கம்' என்ற அமைப்பு தமிழக அரசின் உதவியுடன் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக ஈரோடு அருகே கோபிச் செட்டிப்பாளையம் மலையப்ப பாளையம் என்ற இடத்தில் 20 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள தொடர் பாறையைக் கொண்ட மலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மலையில் தூரத்தில் இருந்து வாசிக்கக்கூடிய வகையில் அனைத்துக் குறள்களும் செதுக்கப்படும். அத்துடன் அந்த இடத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம், 1000 பேர் அமரக்கூடிய கருத்தரங்க மண்டபம், வெளிநாட்டினர் வந்து தங்குவதற்குரிய உயர்தர தங்குமிடம் என்பனவும் அமைக்கப்படுவதுடன், நாற்புறமும் பிரமாண்டமான கோபுரங்களும் எழுப்பப்பட உள்ளன.

## திரையைக் கலக்கிய நகைச்சுவைத் தம்பதியினர்!

தமிழ் திரையுலகில் 'கலைவாணர்' என்றால் அது நகைச்சுவை நடிகர் என்.எஸ்.கிருஸ்ணன் என அனைவரும் சொல்லிவிடுவர். அதுமட்டுமல்லாமல், அவரது மனைவி டி.ஏ.மதுரமும் ஒரு நகைச்சுவை நடிகை என்பது எல்லோருக்கும் தெரியும்.

இந்த நகைச்சுவைத் தம்பதிகள் சோடி சேர்ந்து 130 திரைப்படங்களுக்கு மேல் நடித்துள்ளனர்! இந்த அளவுக்கு வேறு எந்த தமிழ் தரையுலகத் தம்பதியினரும் சோடி சேர்ந்து நடிக்கவில்லை என்று தெரிய வருகிறது.

## மண்ணை 'மிதிக்கும்' மனிதன்!

உலகிலுள்ள மொத்த மண் வளத்தில் 33 வீதமானது அழியும் தறுவாயில் உள்ளதாக புதிய ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எல்லாம் மனிதனால் வந்த வினைதான். வளியை, வானத்தை, நீரை, மரம் செடிகளை, மிருகங்கள் ~ பறப்பன – ஊர்வனவற்றை மட்டுமில்லாமல் இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக இருக்கும் மண்ணையும் மனிதன் தொடர்ந்து நாசமாக்கி வருகிறான்.

அதன்காரணமாக தற்போதைய 2015ஆம் ஆண்டை ஐ.நா. மன்றம் 'உலக மண் வள ஆண்டாக' பிரகடனம் செய்துள்ளது.

www.padippakam.com

## வயிற்றின் நண்பன் தேன்

வயிற்றில் ஏற்படும் புண், அழற்சி, ஈரல், பித்தப்பை நோய்கள் அனைத்துக்கும் மருந்தாக தேன் அமைந்துள்ளது. அதனால்தான் வயிற்றின் நண்பன் தேன் என்கிறோம்.

ஒன்று முதல் மூன்று தேக்கரண்டி தேனை 100 மி.லி. ஆறிய வெந்நீருடன் கலந்து தினமும் காலை அல்லது இரவு நேரங்களில் வெறும் வயிற்றில் உணவு அருந்துவதற்கு முன் பருகி வரவேண்டும்.

இப்படி செய்தால் வயிற்றுப்புண், இரப்பை அழற்சி, ஈரல், பித்தப்பை நோய்கள் குணமாகும். இரைப்பையில் தேவைக்கு அதிகமாக சுரக்கப்படும் அமிலத்தின் தன்மையைக் கட்டுப்படுத்துவதுடன் அமிலத்தால் வயிற்றுப் புண்ணிற்கு ஏற்படுத்தப்படும் தூண்டுதலைக் குறைத்து, எரிச்சல், வலியை நீக்கும்.

மேலும் நீர்த்தாரைப் புண், சிறுநீரக, இதய நோய்களையும் தடுக்க வல்லது தேன்.

## கன்பூசியஸின் அறிவுரை

மரணப் படுக்கையிலிருந்த கன்பூசியஸிடம் அவரது சீடர்களுள் ஒருவர், குருவே எங்களுக்குக் கடைசியாக ஏதாவது அறிவுரை கூறுங்கள் என்றார்.

கன்பூசியஸ் தன் வாயைத் திறந்து காட்டி, ''என் வாயில் என்ன தெரிகிறது?'' என்றார். ''நாக்கு'' என பதில் அளித்தார் சீடர். ''பற்கள் இருக்கிறதா?'' என்று கேட்டதும், ''இல்லை'' என்றார் சீடர். ''இதிலிருந்து என்ன தெரிகிறது?'' என்றார் கன்பூசியஸ். எனக்கு ஒன்றும் புரியவில்லையே என்றார் சீடர்.

''நாக்கு மென்மையானது. பல் வலிமை மிக்கது. நாக்கு பிறந்தது முதல் நம் உடல் உறுப்புகளுள் ஒன்றாக உள்ளது. பல் பிறகுதான் முளைக்கிறது. வயது முதிர முதிர கீழே விழுந்து விடுகிறது. நாக்கு அப்படியே உள்ளது. நாக்கைப் போல மென்மையானவர்களாக இருங்கள். நீண்டநாள் வாழ்வீர்கள்'' என்று இறுதியாகக் கூறினார்.

## கணினி யுகத்திலும் கொடி கட்டும் புத்தக வாசனை!

**வ**ருடா வருடம் ஜனவரி மாதத்தில் 'பப்பாசி' என்ற அமைப்பு தமிழகத் தலைநகர் சென்னையில் புத்தகக் கண்காட்சி நடாத்தி வருகிறது. இவ்வருடம் (2015) நடைபெற்ற கண்காட்சி பற்றிய தகவல்கள் இவை:

அமைக்கப்பட்ட புத்தக அரங்குகள் - 700

பங்குபற்றிய பதிப்பாளர்கள் - 450

புத்தகத் தலைப்புகளின் தொகை - 5 இலட்சம்

விற்பனையான புத்தகங்களின் தொகை - 8 இலட்சம்

பங்கு பற்றிய பார்வையாளர் தொகை - 12 இலட்சம் (கடந்தாண்டை விட 2 இலட்சம் கூடுதல்)

விற்பனையின் பெறுமதி - 15 கோடி ரூபா (கடந்தாண்டை விட 5 கோடி அதிகம்)

உடல் நலம் சார்ந்த நூல்களே அதிகம் விற்பனை ஆகியுள்ளன.

அதிகானமானோரால் தேடப்பட்ட புத்தகமாக இந்துத்துவ வெறியர்களால் தடை செய்யப்பட்ட பெருமாள் முருகன் எழுதிய 'மாதொருபாகன்' நாவல் திகழ்ந்துள்ளது.

## பார்க்கின்சன்'ஸ் நோய் எதனால் வருகின்றது?

**பார்கின்சன்'ஸ்** நோய் எதனால் வருகிறது என்று பார்க்கலாம். மனிதனின் எல்லா செயல்களுக்கும் மூளைதான் காரணம் என்பது நம்மெல்லோருக்கும் தெரியும். முக்கியமாக, தசை இயக்கத்தைத் தூண்டும் நரம்பு மண்டலத்தை இயக்கும் செய்திகளை மூளைதான் பிறப்பிக்கிறது. இச்செய்திகள் மூளையிலிருந்து புறப்பட்டு நரம்புமண்டலத்தை சென்றடைய 'டொபொமைன்' என்ற வேதிக்கூறு அவசியம். 'டொபொமைன்' மூளையின் ஒரு பகுதியில் இருக்கும் நியூரான்களால் தயாரிக்கப்படுகிறது.

இயற்கையாகவே, டொபொமைன் தயாரிக்கும் நியூரான்கள் 80 வீதம் தேவைக்கதிகமாக இருக்கின்றன. 80 வீதத்திற்கு மேல் இந்த நியூரான்கள் செயலிழந்து போய்விடுமானால் டொபொமைன் தட்டுப்பாடு ஏற்படும். தசை இயக்கத்தைத் தூண்டும் நரம்புமண்டலம் கட்டுப்பாடு இழந்துவிடும். இவ்வகைக் கட்டுப்பாடு இழத்தலையே பார்க்கின்சன்'ஸ் வியாதி என்கிறார்கள். இதன் முதல் அறிகுறிகள் கைகளில் நடுக்கம் மற்றும் விறைப்புத்தன்மை எனப்படும் Regidity.

பார்க்கின்சன்'ஸ் நோயை பூரண குணமாக்கக்கூடிய மருந்தேதும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. மேலும், உக்கிரமடையாமல் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியாது. ஆனால், செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட டொபொமைன் எடுத்துக் கொள்வதன் மூலம் நோயின் உபாதைகளிலிருந்து ஓரளவு விடுதலை பெறலாம். இவ்வாறு செயற்கையாகத் தயாரிக்கப்படும் டொபொமைன், எல்டோபா என்று அறியப்படுகிறது.

(இந்த நோயினால் பாதிக்கப்பட்ட எஸ்.ரங்கராஜன் என்பவர் 'கல்கி' வார இதழில் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து)

## ரஸ்யாவின் தற்போதைய இராணுவ பலம்

- படை வீரர் எண்ணிக்கை – 800,000
- டாங்கிகள் – 15,000
- போர்க் கப்பல்கள் – 170
- போர் விமானங்கள் – 1,300

**தகவல்:** Maclean's Magazine (Canada)


படிப்பகம்

www.padippakam.com

# தமிழக கட்சிகளின் முகத்திரையைக் கிழித்த ரணிலின் துப்பாக்கிச் சூட்டுப் பேச்சு!

- இரா.கார்த்திகேசு -

இலங்கையின் புதிய ஜனாதிபதியினால் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி (இதை ஒழிக்கப் போவதாகச் சொல்லித்தான் ஆட்சிபீடம் ஏறினார்) ஜனநாயக விரோதமான முறையில் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமது அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் சிறப்பு வெளிப்பாடுகளில் ஒன்றாக இந்தியாவுக்கு எதிரான முதலாவது கல்லை வீசியிருக்கிறார்.

மைத்திரிபால சிறிசேன இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இந்தியாவின் 'ரோ' அமைப்பின் மூலம் உதவி செய்த இந்தியாவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவோ என்னவோ, இந்தியாவுக்கே தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார்.

பதிலுக்கு இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். மோடி விஜயம் மேற்கொள்வதற்கு முன்னதாகத்தான் ரணில் இந்தியாவை நோக்கித் தனது கல்லை வீசி எறிந்தார்.

அப்படி என்னதான் ரணில் பென்னம் பெரிய இந்தியாவுக்கு எதிராகச் செய்துவிட்டார்? தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி இலங்கைக் கடற்பரப்பிற்குள் மீன் பிடித்தால் அவர்களைச் சுட்டுத் தள்ளுவதற்கு இலங்கை அரசுக்கு உரிமை உள்ளது எனத் துணிகரமாகத் திருவாய் மலர்ந்தார். உண்மையில் இது ஒரு துணிச்சலான கூற்றுத்தான்!

அதுவும் இந்தியாவின் பிரதமர் இலங்கை வரவிருந்த சூழலில், அதற்கு முன்னோடியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சிறீமதி சுஸ்மா சுவராஜ் வரவிருந்த நேரத்தில், ரணில் இந்தக் குண்டைத் தூக்கிப் போட்டார். ரணலின் இந்தப் பேச்சைக் கேட்டு வழமையாக நாரதர் வேலையில் துடிப்புடன் செயல்படும் இலங்கை - இந்திய ஊடகங்கள் ஆரவாரம் செய்து செய்திகளை வெளியிட்டன.



ஆனால் அவர்கள் எதிர்பார்த்த மாதிரி இந்தியப் பிரதமரின் விஜயத்தின் போது ரணிலின் கூற்றுப் பற்றி விவாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதுமாத்திரமல்ல, இந்தியா ரணிலின் 'ஆத்திரமூட்டும்' பேச்சு சம்பந்தமாக அலட்டிக் கொள்ளவும் இல்லை. அதைவிட ஆச்சரியம் என்னவென்றால், மகிந்த ராஜபக்ச தான் உயிர் வாழ்வதற்காக இயற்கையாகச் சுவாசித்தாலும், அவர் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவும், தமிழகத்தில் வாழும் 7 கோடி தமிழர்களுக்கு எதிராகவுமே திட்டமிட்டுச் சுவாசிக்கிறார் என ஆர்ப்பாட்டம், கடையடைப்பு, பஸ் எரிப்பு எனச் செய்யும் தமிழகப் பிழைப்புவாத அரசியல் கட்சிகள் கூட ரணிலின் திமிர்த்தனமான பேச்சுப் பற்றி பேசாமடந்தைகளாக மாறிப்போய் இருக்கிறார்கள். இந்திய அரசினதும், தமிழக அரசியல்வாதிகளினதும் இந்த, ரணிலின் பேச்சைக் கண்டு கொள்ளாத போக்கு ரணிலையும் கொஞ்சம் எரிச்சலூட்டி இருப்பதாகத் தெரிகிறது. அதனால்தானோ என்னவோ மோடி வந்து போன பின்னரும் கூட ரணில் மீண்டுமொரு தடவை தமிழக மீனவர்கள் எல்லை கடந்தால் அவர்களைச் சுடுவதற்கு இலங்கை அரசுக்கு உரிமை உள்ளது என மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார்.

ரணிலின் இந்தப் பாரதூரமான பேச்சில் இரண்டு விடயங்கள் உள்ளடங்கி உள்ளன. முதலாவது விடயம், இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கு உதவிய இந்தியாவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் விதமாக ஏன் ரணில் அப்படிப் பேசினார் என்பது. இரண்டாவது விடயம், எடுத்ததிற்கெல்லாம் இலங்கைக்கு எதிராக ஆவேசப் போராட்டம் நடாத்தும் தமிழக அரசியல்வாதிகள் ரணிலின் பேச்சுக் குறித்து ஏன் அடக்கி வாசிக்கிறார்கள் என்பது.

ரணில் ஏன் அப்படிச் சொன்னார் என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. வரலாற்று ரீதியாகவே ஐ.தே.க இந்தியாவுக்கு எதிரான ஒரு கட்சி என்பது முக்கியமானதாகும். சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த அன்றைய ஐ.தே.க. தலைவர் டி.எஸ். சேனநாயக்கவின் அரசாங்கம் தான் இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும், பிரஜாவுரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கி


படிப்பகம்

www.padippakam.com

சுதந்திர இலங்கையில் இந்திய விரோதப் போக்கிற்கு கால்கோள் இட்டது.

அத்துடன் சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமர் நேருவும், பின்னர் அவரது புதல்வி இந்திராகாந்தியும் இந்தியாவின் பிரதமர்களாகப் பதவி வகித்த, அமெரிக்க – சோவியத் பனிப்போர் நிலவிய அக்காலகட்டத்தில், அவர்களுடைய அரசுகள் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்ததால், அமெரிக்க சார்பான ஐ.தே.கவும் அமெரிக்காவுக்குச் சார்பாக இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வந்தது.

இந்த விடயத்தில் ரணிலின் மாமனார் அரசியல் குள்ளநரி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மிகவும் தீவிரமான இந்திய எதிர்ப்பாளர் ஆவார். அவர் 1977இல் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தியாவுக்கு எதிராக, தீவிரமான அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை எடுத்ததும், அவருக்கு ஒரு 'பாடம் படிப்பிக்க' இலங்கையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை இந்திராகாந்தி அரசு தொடக்கி விட்டதும் வரலாற்று நிகழ்வுகள்.

ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில்தான் இந்திய - இலங்கை உடன்படிக்கையில் கையெழுத்திட இலங்கை வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜே.ஆர். முன்னிலையில் மரியாதை அணிவகுப்பில் கலந்து கொண்ட இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவன் ராஜீவின் தலையில் தனது துப்பாக்கி பிடியால் தாக்கிக் கொலை செய்ய முயன்றான். (அவன் செய்ய முடியாமல் போனதைப் பின்னர் புலிகள் வெற்றிகரமாகச் செய்து முடித்துவிட்டார்கள்) அதன் பின்னர் தற்போதைய மோடியின் விஜயத்துக்கு முன்னர் இதுவரை காலமும் இந்தியப் பிரதமர் யாருமே இலங்கை வருவதைத் தவிர்த்து வந்தனர்.

இவைகள் பழைய கதைகள். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ரணில் இந்திய விரோத நிலைப்பாட்டை எடுப்பதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று இந்தியா தன்னை இலங்கை அரசியலில் ஓரம்கட்ட முயற்சிக்கிறது என்ற ரணிலின் சந்தேகமாகும்.

அண்மையில் நடந்து முடிந்த இலங்கை ஜனாதிபதித் தேர்தலின் போது எதிரணி சார்பில் ரணில் போட்டியிட விரும்பிய போதும், அதைத் தடுத்து மைத்திரியை பொது வேட்பாளராக்கியதில் இந்தியாவின் 'ரோ' உளவு அமைப்புக்கு முக்கிய பங்கு உண்டு என்ற பலமான அபிப்பிராயம் இலங்கையில் நிலவுகின்றது.



அதற்குக் காரணம் ரணில் தீவிரமான மேற்கத்தைய சார்பாளர் என்பதாகும். தற்போதைய மோடியின் இந்திய அரசும் மேற்கத்தைய – அதிலும் குறிப்பாக அமெரிக்க சார்பு அரசு என்றாலும், தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லரசாகத் தன்னைக் கருதிக் கொள்ளும் இந்தியா, தன்னைத் தவிர இந்தப் பிராந்தியத்தில் உள்ள வேறெந்த நாடும் மேற்கத்தைய சக்திகளுடன் நேரடியாகத் தொடர்பு வைத்துச் செயல்படுவதை விரும்பவில்லை. அமெரிக்கா உலகப் பொலிஸ்காரன் என்றால், இந்தியா தென்னாசியப் பொலிஸ்காரன் என்பதே இந்தியா நீண்டகாலமாகக் கடைப்பிடித்து வரும் கொள்கையாகும். இந்தக் கொள்கை இந்தியாவில் எந்த அரசு பதவிக்கு வந்தாலும் மாறாத ஒன்றாகும்.

எனவேதான் அமெரிக்காவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் நீண்டகால வரலாற்றைக் கொண்ட ரணிலை விட, அவ்வாறான நிலைப்பாடு எதுவும் அற்ற மைத்திரி ஜனாதிபதியாக வந்தால் அவரைக் கையாள்வது சுலபம் என்பது இந்திய ஆளும் தரப்பின் எண்ணமாகும். இது ரணிலுக்கும் புரியும். அதனால்தான் ரணில் தனது எதிர்ப்பை இந்தியாவுக்குத் தெரியப்படுத்துவதற்காக இந்தியாவின் எந்த அரசுக்கும் தலையிடியாக இருக்கும் தமிழக மீனவர் பிரச்சினையில் அப்படி ஒரு 'துப்பாக்கி சூட்டு' கதையைத் திரும்பத் திரும்பச் சொல்லி மோடி அரசுக்கு தமிழக அரசியல் அரங்கில் ஒரு நெருக்கடியை உருவாக்க முயல்கிறார். அதைப் புரிந்து கொண்டதாலேயே மோடி அரசும் ரணிலின் கல்லெறிகளைத் தட்டிவிட்டுவிட்டு அமைதியாக இருக்கிறது.

ஆனால் தமிழக அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் அமைதியாக இருப்பதுதான் பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது. ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை கடற்படை தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தினாலும் நடத்தாவிட்டாலும் தமிழக அரசியல்வாதிகள் இலங்கை அரசுக்கு எதிராக காரசாரமான கண்டன அறிக்கைகள் விடுவதும், தமிழக மீனவக் கிராமங்களில் தொடர் போராட்டங்கள் நடாத்துவதும் அன்றாட விடயங்கள். ஆனால் இப்பொழுது இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே 'எல்லை தாண்டும் தமிழக மீனவர்களைச் சுடுவோம்' என கொடுக்கை வாரிக் கட்டிக்கொண்டு போர்ப் பிரகடனம் செய்த போதிலும், எந்நேரமும் நெருப்புக் கக்கும் தீக்கோழிகளான வைகோ, நெடுமாறன், ராமதாஸ், திருமாவளவன் போன்றவர்கள் மணலுக்குள் தலையைப் புதைத்துக் கொண்டு சத்தம் சந்தடியின்றி அடங்கிப்போய்க் கிடக்கின்றனர்.

இதற்குக் காரணம் என்ன?

பொதுவாகவே தமிழகத்தில்

www.padippakam.com

இடதுசாரிக் கட்சிகளைத் தவிர (அவர்களும் ஓட்டுப் பொறுக்குவதற்காக சில வேளைகளில் இலங்கைப் பிரச்சினையில் தப்புத்தாளங்கள் போடுவதுண்டு), மற்ற எல்லா திராவிடப் பிழைப்புவாதக் கட்சிகளும் ஏகாதிபத்திய சார்புக் கட்சிகளே. அதனால்தான் கடந்த காலங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பான மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது எடுத்ததெற்கெல்லாம் இலங்கைக்கு எதிராக போர்க்கொடி தூக்குவதை வழமையாகக் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல, இலங்கையில் ராஜபக்சவை வீழ்த்தி மேற்குலகின் கைப்பொம்மைகளான ரணில் - மைத்திரி கூட்டை ஆட்சிக்குக் கொண்டு வருவதிலும் அவர்களுக்கும் முக்கிய பங்கு இருந்தது.

எனவே தமது சகாவான ரணில் விக்கிரமசிங்க என்ன சொன்னாலும் சொல்லிவிட்டுப் போகட்டும். அதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விடுவோம் என அவர்கள் சபதம் செய்திருக்கிறார்கள் போலும். இன உறவை விட வர்க்க – அரசியல் உறவு மேலானது என மார்க்சிய மூலவர்கள் சும்மாவா சொல்லிச் சென்றிருக்கின்றனர்.

ரணிலின் இந்திய எதிர்ப்புக்கு இன்னொரு முக்கிய காரணமும் இருக்கின்றது. அதாவது ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்றுப் போனதற்கு மேற்கத்தைய உளவு அமைப்புகளின் செயற்பாடுகளுடன், இந்திய ரோ உளவு அமைப்பும் ஒரு காரணம் என முன்னாள ஜனாதிபதி மகிந்த அண்மையில் இரண்டு மூன்று தடவைகள் திரும்பத் திரும்பக் கூறியிருந்தார். அதன் மூலம் பெரும்பான்மை சிங்கள இனம் மத்தியில் மீண்டும் ஒரு இந்திய எதிர்ப்பு அரசியல் களைகட்டத் தொடங்கியிருக்கிறது.

விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதால் இந்த இந்திய எதிர்ப்பு அரசியல் மேடைகளில் ஒரு பிரபலமான பிரச்சார ஆயுதமாக மாறக்கூடிய சூழல் உள்ளது. அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால், ஏதோ ஒரு வகையில் அடுத்த தேர்தலில் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்கக் காத்துக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்சவுக்கு அது பெரும் வாய்ப்பாக இருக்கும்.

ஏனெனில் பாரம்பரியமாகவே சிங்கள மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பு உணர்வு ஆழமாக வேரூன்றி இருக்கின்றது. அது தென்னிந்திய மன்னர்கள் இலங்கை மீது முன்னைய வரலாற்றுக் காலங்களில் அடிக்கடி படையெடுத்து அவர்களை அடிமைப்படுத்தியதால் உருவானது. அந்த உணர்வை நவீன இலங்கையின் வரலாற்றில் எண்ணெய் ஊற்றி வளர்த்த பெருமை ஐ.தே.கவையே சாரும். பின்னர் ஜே.வி.பி அதைத் தனது கொள்கையின் அடிநாதமாக வரித்துக் கொண்டது. இந்திய - இலங்கை உடன்படிக்கை காலத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தனது பங்கிற்கு இந்திய எதிர்ப்பைக் கிளறியது. அரசியல் கட்சிகள் தவிர, பல்வேறு பௌத்த அமைப்புகள், சிங்கள அமைப்புகள் என்பனவும் இந்திய எதிர்ப்பிலேயே உரம் பெற்று இருப்பன. எனவே அது எப்பொழுதும் இலங்கை அரசியலில் நீறுபூத்த நெருப்பாகவே இருந்து வருகின்றது.

தனது மாமனார் ஜே.ஆர். அளவுக்கு இல்லாவிட்டாலும், சின்ன அரசியல் குள்ள நரியான ரணிலுக்கு இது நன்கு விளங்கும். எனவேதான் அடுத்த பொதுத்தேர்தலில் தனது எதிரணியான சிறீ.ல.சு.கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரி அக்கட்சியின் தலைவர் என்ற வகையில் தலைமை தாங்கினாலும், அவரை இந்திய ஆதரவாளராகவும், தன்னை இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் தேசபக்திமானாகவும் காட்டி வெற்றி பெறுவதற்காகவே, ரணில் இந்த இந்திய எதிர்ப்பு என்ற அஸ்திரத்தை இப்பொழுதே கையில் தூக்கி வைத்திருக்கிறார் என்பதே உண்மையாகும்.

ஆனால் கண்குகள் யாரும் போடலாம். விடைகள் எப்படி அமையும் என்பதையும், அதில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். *

7ம் பக்கத்தொடர்ச்சி...

விக்னேஸ்வரனுக்கும் அப்படி ஒரு பிரச்சினையும் இல்லையென்று ஒருபுறத்தில் மறுக்கும் சம்பந்தன், மறுபுறத்தில் இந்தப் பிரச்சினைக்கு என்ன செய்வது என்று கூட்டமைப்பு தலைவர் என்ற முறையில் தனக்குத் தெரியும் எனவும் அகங்காரத்துடன் கூறியிருக்கிறார். இங்கும் கூட 4 கட்சிகள் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பில் ஆலோசித்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அவர் சொல்லவில்லை. 'நானே எல்லாம்' என்ற அகங்காரத்துடனும், சர்வாதிகாரத்தனத்துடனும்தான் பதில் இறுத்திருக்கிறார்.

இதிலிருந்து தெரிகிறது இவர்கள் ஊடகங்களை மதிக்கும் விதமும், உட்கட்சி ஜனநாயகத்தைப் பேணும் முறையும் தெளிவாகின்றது. தமிழ் மக்கள் ஏமாந்த 'சோணகிரிகளாக' இருக்கும் வரை அவர்கள் இதுவும் செய்வார்கள், இன்னமும் செய்வார்கள். *

கம்யூனிஸ்ட்களாகிய நாங்கள் தனி வார்ப்பு. தனித் தாதுக்களால் ஆக்கப்பட்டவர்கள். உலகப் பாட்டாளி வர்க்கப் படையின் நேர் நிகரற்ற போர்த்தந்திரியான தோழர் லெனினின் அணியில் அங்கத்தினர்கள். இந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதை விட சிறந்த பெருமை எங்களுக்கு வேறெதுவும் இல்லை.

**- தோழர் ஜுலியஸ் பூசிக்**

நீ செய்யும் காரியம் தவறாகும் போது,
நீ நடக்கும் பாதை கரடு முரடாய் தோன்றும் போது,
உன் கையிருப்பு குறைந்து கடன் அதிகமாகும் போது,
உன் கவலைகள் உன்னை அழுத்தும் போது,
அவசியமானால் ஓய்வெடுத்து கொள்.
ஆனால் ஒருபோது மனம் தளராதே.

**-டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி**


படிப்பகம்

www.padippakam.com


# துயரத்தை பகிர்தல்

*பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த தோழர் இராசையா அவர்கள் அண்மையில் காலமாகிவிட்டார். தோழர் இராசையா தனது இளமைக்காலம் முதலே கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒருவராவார். அத்துடன் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி 1960களில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் ஊடாக முன்னெடுத்த சாதி அமைப்புக்கும், தீண்டாமைக்கும் எதிரான போராட்டங்களிலும் முன்னணியில் நின்று செயற்பட்ட ஒரு போராளியாவார்.*

*இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் தோழர்களில் ஒருவரும், இலங்கை தேசிய ஆசிரிய சங்கத்தின் (லங்கா ஜாதிக குரு சங்கமய) தலைமை நிர்வாகிகளில் ஒருவருமான தோழர் தோழர் மு.குமாரசாமி அவர்களின் அன்புத் துணைவியாரும், மகிந்தனின் தாயாருமான ஓய்வுபெற்ற ஆசிரியை நேசமணி அவர்கள் அண்மையில் கல்வியன்காட்டிலுள்ள அவரது வீட்டில் காலமானார். அவர் தனது கணவர் தோழர் குமாரசாமியின் அரசியல் - தொழிற்சங்க - சமூக நடவடிக்கைகளில் உறுதுணையாக நின்ற, சமூக அக்கறை கொண்டு வாழ்ந்த ஒருவராவார்.*

*முரசுமோட்டை இரண்டாம் கட்டைச் சந்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட, "குணத்தான்" எனத் தோழர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட பொடிசிங்கம் குணரத்தினம் சில மாதங்களுக்கு முன்னர் வவுனியாவில் காலமானார். குணத்தான் தனது பாடசாலை நாட்களிலேயே – 70களின் நடுப்பகுதியில் - கிளிநொச்சியில் செயற்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்துடன் இணைந்து உற்சாகமாகச் செயற்பட்ட ஒருவராவார். அவரது தகப்பனார் காலஞ்சென்ற பொடிசிங்கம் அவர்களும் விவசாயிகள் சங்கத்தின் செயற்பாட்டாளராக இருந்த ஒருவராவார்.*

*விசுவமடு படித்த வாலிபர் குடியேற்றத்தைச் சேர்ந்த "வள்ளுவர்" என அழைக்கப்படும் தோழர் செல்வராசா அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் விசுவமடுவில் காலமானார். தோழர் செல்வராசா தனது இளமைப் பருவம் முதல் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியியுடன் இணைந்து பல ஆண்டுகள் செயற்பட்ட ஒருவராவார். 80களில் தமிழ் இளைஞர்களின் ஆயுதம் தாங்கிய இன விடுதலைப் போராட்டம் ஆரம்பமான பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்துடனும் இணைந்து செயற்பட்டார். தருமபுரத்தைச் சேர்ந்த இவரது மனைவியின் சகோதரரும், இறுதி யுத்த நேரத்தில் காணாமல் போனவருமான தோழர் கந்தசாமி அவர்களும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு செயற்பாட்டாளராவர்.*




**இவர்கள் அனைவரதும் மறைவுக்கு 'வானவில்' தனது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவர்களது குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.**

# நீர்வை பொன்னையனின் இரண்டு புதிய கதைத் தொகுதிகள்

இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் அவர்களின் இரண்டு புதிய சிறுகதைத் தொகுதிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அண்மையில் வெளியாகி உள்ளன.

- உறவு
- Devils & Demons

பிரதிகள் வேண்டுவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்**
Sri Lanka Progressive Art & Literary Association
18-6/1, Collingwood Place
Colombo – 6 - Sri Lanka
E-Mail: kailashpath@yahoo.com

# எட்வர்ட் ஸ்னோடெனுக்கு நியூயார்க்கில் சிலை

அமெரிக்காவின் உளவு வேலைகளை அம்பலப்படுத்தியதால், அமெரிக்க அரசால் தேடப்பட்ட நிலையில் எட்வர்ட் ஸ்னோடன் ரஷ்யாவில் அரசியல் தஞ்சம் கோரி, கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக அவர் ரஷ்யாவில் வசித்து வருகிறார்.

எட்வர்ட் ஸ்னோடெனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சில கலைஞர்கள் சேர்ந்து, போரில் மரணம் அடைந்தவர்களின் நினைவிடங்கள் அமைந்துள்ள நியூயார்க் பூங்காவில் ஸ்னோடெனுக்கு, அனுமதி பெறாமல் சிலை வைத்துவிட்டார்கள். இந்த தகவல் அறிந்து அங்கு வந்த போலீசார் துணியால் சிலையை மூடினார்கள். பின்னர் உயர் அதிகாரிகளின் ஆலோசனைப்படி அங்கிருந்து சிலை அகற்றப்பட்டது.

இது பற்றி அடையாளம் தெரியாத அந்த கலைஞர்கள் அனிமல் நியூயார்க் என்ற வலைபூவில் 'இப்போது அநீதிக்கு எதிராக போராடுபவர்களுக்கு வெண்கலத்தில் சிலை வைப்பதற்கு பதிலாக அவர்கள் குற்றவாளிகள் என்று கூறி துரத்தப்படுகிறார்கள்' என்று தெரிவித்து உள்ளார்கள். *


படிப்பகம்

www.padippakam.com

முன்பக்கத்தொடர்ச்சி...

கேட்டு நிற்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு, உண்மையான எதிர்க்கட்சியாகச் செயல்படுகின்ற நிலையில் இருக்கின்றதா?

1994இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவி ஏற்றதிலிருந்து எதிர்ப்பு அரசியலையே செய்து வந்த கூட்டமைப்பு, ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக எந்தவொரு வாக்குறுதியையும் பெற்றுக் கொள்ளாமல் எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து அவரைப் பதவிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகித்தது. அதற்கு முன்னர் 2010இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் கூட முன்னாள் இராணுவத் தளபதியும், புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் (கூட்டமைப்பினரின் மொழியில் தமிழின அழிப்பு யுத்தம்) முக்கிய பங்கு வகித்தவரும், தமிழ் மக்களுக்கு எதிராகப் பகிரங்கமாக கருத்து தெரிவித்து வந்தவருமான, சரத் பொன்சேகாவையே கூட்டமைப்பு ஆதரித்தது.

தமிழ் தலைமைகள் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்கு எதிரான தென்னிலங்கை அரசியல் (ஐ.தே.க) கட்சியையே ஆதரிப்பதை ஒரு மரபாகக் கொண்டு வந்திருக்கின்றன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கின்ற தற்போதைய அரசாங்கம் கூட, தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக எந்தவொரு தீர்வையும் காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதற்கான அறிகுறி எதனையும் காணவில்லை. மறுபுறத்தில் இந்த அரசாங்கத்தை ஆதரிக்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பும் கூட அது சமபந்தமாக எந்தவொரு கோரிக்கையையும் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாகவும் தெரியவில்லை.

குறைந்தபட்சம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பாவது ஏதாவது தீர்வுத் திட்டம் எதனையும் முன் வைத்திருக்கிறதோ என்றால், அதுவும் இல்லை. "தீர்வுத் திட்டம் தயாரிக்கிறோம்...தயாரிக்கிறோம்" என இதுவரை அவர்கள் பல தடவை சொல்லியும், அவர்களது தயாரிப்பு என்ன என்பது இதுவரை மூடுமந்திரமாகவே இருக்கின்றது.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என அறிவித்தது. இது வழமையான வாய்ச்சவடால் என எல்லோருக்கும் தெரியும் என்றாலும், சிலருக்கு இந்த அரசாங்கத்தை தமிழ் கூட்டமைப்பும் சேர்ந்துதான் பதவிக்குக் கொண்டு வந்தது என்றபடியால், அது ஏதாவது செய்யக்கூடும் என்ற சிறு நப்பாசை ஏற்பட்டு இருந்தது. ஆனால் அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் அந்தப் பிரச்சினை இடம் பெறாததுடன், அரசாங்கம் பல கட்சிகளையும் கொண்டு அமைத்துள்ள 'தேசிய நிறைவேற்றுச் சபை'யிலும் அதுபற்றி ஒருமுறை தன்னும் கலந்துரையாடப்படவும் இல்லை.

அரசாங்கத்தின் இந்தப் போக்கில் ஆச்சரியப்படுவதற்கு ஏதும் இல்லை. ஏனெனில் இந்த அரசாங்கத்தின் மூன்று முக்கிய புள்ளிகளான ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரின் நிலைகளை எடுத்துப் பார்த்தால் இந்த நிலை பற்றிப் புரிந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே மைத்திரிபால சிறிசேன, தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக இப்பொழுது எதுவும் கதைக்கக்கூடாது என திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். அதற்கு சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்காது போய்விடும் என்ற அச்சம் மட்டும் காரணமல்ல. இனப்பிரச்சினை சம்பந்தமான அவரது நிலைப்பாடும் ஒரு காரணம். இருந்தும் சூடு சுரணையற்ற தமிழ் பேசும் மக்களான தமிழ் – முஸ்லீம் மக்களின் வாக்குகளால்தான் அவர் வெற்றி பெற்றார்.

ரணிலைப் பொறுத்தவரை, அவரது வரலாற்றைப் பற்றி புதிதாக ஏதும் சொல்லத் தேவையில்லை. அண்மையில் அவர் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது, "வடக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்" என மொட்டையாகச் சொன்னார். இதில் ஆழமான அர்த்தம் பொதிந்து கிடக்கிறது. அதாவது வடக்கு மட்டுமின்றி, கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்பதை ஏற்றுக்கொள்ளாத தொனி இதில் இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இந்தப் பிரச்சினையை தேசிய இனப்பிரச்சினை என்றோ அல்லது குறைந்தபட்சம் தமிழ் மக்களின் பிரச்சினை என்றோ கூட அவர் சொல்ல விரும்பவோ, தயாராகவோ கூட இல்லை. இன்று மட்டுமல்ல, அவர் என்றுமே தமிழ் மக்களின் பிரச்சினையை 'வடக்கு பிரச்சினை' என்றுதான் சொல்லி வந்திருக்கிறார் என்பது அவரை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

அதுமட்டுமல்ல, சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 2000ஆம் ஆண்டில் அவரது அரசாங்கம் முன்வைத்த 'தீர்வுப்பொதி'யை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது, தமது ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் அதன் பிரதிகளை பாராளுமன்றத்துக்கு உள்ளேயே தீ வைத்துக் கொளுத்திய போது ரணில் வேடிக்கை பார்த்து ரசித்ததை நாட்டு மக்கள் தொலைக்காட்சிகளில் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

அதுமட்டுமின்றி. அவர் தலைமைதாங்கும் ஐ.தே.க கட்சிதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக காலத்துக்காலம் உருவாக்கப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தம், இந்திய – இலங்கை உடன்படிக்கை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் என்பனவற்றை


படிப்பகம்

www.padippakam.com

நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்தவர்கள். அவரது மாமன் ஜே.ஆர்.ஜெயவர்தன தான் பண்டா – செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறிய வைப்பதற்காக அபகீர்த்திமிக்க ‘கண்டி யாத்திரை’யை முன்னின்று நடாத்தியவர். அவரது ஆட்சியில்தான் 1977, 1981, 1983 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மீது அரச ஆதரவுடன் வன்செயல் கட்டவிழ்த்துவிடப்பட்டு, ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன், அவர்களது சொத்துகள் சூறையாடப்பட்டு, வாழ்விடங்களை விட்டு துரத்தியடிக்கப்பட்டார்கள். அந்த மாமனாரின் அரசில் ரணில் முக்கியமான ஒரு அமைச்சராகப் பதவி வகித்தவர் என்பதும் மறந்துவிடக்கூடியதல்ல.

ரணிலின் ஐ.தே.க தான் 1977இல் பதவிக்கு வந்ததும் அரசியல் ரீதியாகத் தீர்வுகாண வேண்டிய இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றியது என்பதையும் மறந்துவிட முடியாது. எனவே ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் என யாராவது (கூட்டமைப்பு அப்படிச் சொல்லித்தான் தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கிறது) சொன்னால், அவர்கள் மோசடிக்காரர்கள் அல்லது அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

இதில் தனது தந்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க போல, சந்திரிகாவும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் உண்மை விசுவாசத்துடன் செயல்பட்டவர் என்ற ஒரு கருத்து இருந்தது. ஆனால் ‘பன்றியோடு சேர்ந்த பசுமாடும்...ஏதோ செய்யும் என்பது போல’, மகிந்த ராஜபக்ச மீதான அரசியல் காழ்ப்புணர்ச்சி, குரோதம் என்பன காரணமாக அவர் ஐ.தே.கவுடன் சேர்ந்ததின் மூலம் அதைக் கெடுத்துக் கொண்டுள்ளார். அதுவும் தான் முன்வைத்த எந்தத் தீர்வுத் திட்டத்தை ரணில் கோஸ்டி பாராளுமன்றத்தில் தீ வைத்து எரித்ததோ, அந்த ரணில் கோஸ்டியுடன் அவர் இன்று கைகோர்த்து நிற்கும் அலங்கோலத்துக்கு அவர் எந்த நியாயத்தையும் சொல்லித் தப்பிவிட முடியாது.

இந்த நிலைமையில் என்ன முகாந்திரத்தை வைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்றைய ஐ.தே.க அரசாங்கத்தை ஆதரிக்கின்றது என ஒருவர் யோசிக்கக்கூடும். அப்படி ஒருவர் யோசித்தால் அதில் நியாயம் உண்டு. ஆனால் அதற்கான காரணங்கள் கூட்டமைப்புக்கு உண்டு என்பதில் விடயம் அடங்கியிருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினையை விட கூட்டமைப்புக்கு அந்தக் காரணங்கள் முக்கியமானவை.

அதில் பிரதானமானது, இனப்பற்றை விட ஐ.தே.கவுடனான வர்க்கரீதியான, அரசியல் ரீதியான பற்றுதல் கூட்டமைப்புக்கு முக்கியமானது. அடுத்தது, இலங்கை அரசியலில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான, ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளை தொடர்ச்சியாக எதிர்த்து வந்ததின் பழக்க தோசம். இன்னொன்று, இனப்பிரச்சினையை யாராவது தீர்த்துவிட்டால், பிச்சைக்காரனின் புண்ணைப் போல அதைக்காட்டி அரசியல் பிழைப்பு நடாத்த முடியாமல் போய்விடுமே என்ற அச்சம்.

எனவே ஐ.தே.க ஆட்சிக்கு வந்தால் கூடிக்குலாவுவதும், ஏனைய கட்சிகள் வந்தால் எதிர்ப்பு அரசியல் நடாத்துவதும் என்ற தமிழ் தலைமைகளின் இரட்டை வேட அரசியலால், தமிழ் மக்களின் பிரச்சினை மீண்டும் கிணற்றில் போட்ட கல்லாக மாறிவிடப்போகும் அபாயம் எழுந்துள்ளது. இந்த அவல நிலையை முற்போக்கு சக்திகள்தான் சரியாகவும், தீர்க்கதரிசனத்துடனும் புரிந்து கொண்டு, சரியான தலைமைத்துவத்தைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கு பிரயத்தனம் எடுக்க வேண்டும். 1970களில் இந்தப் பிரச்சினை தீவிரமடைந்த போது, உண்மையான மார்க்சிச – லெனினிசவாதிகள் அதைச் சரியாகப் புரிந்து கொண்டு, எவ்வாறு தமிழ் மக்களின் பரந்துபட்ட ஜனநாயக முன்னணி ஒன்றை உருவாக்கி, தமிழ் மக்களின் அழிவுக்கு வழி கோலிய தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவினைவாதத்திற்கும் எதிராகப் போராட முன்வந்தார்களோ, அதேபோன்று ஏற்பட்டிருக்கின்ற இன்றைய சூழ்நிலையிலும், அவர்கள்தான் நிலைமையைச் சரியாகப் புரிந்துகொண்டு முன்கையெடுத்துச் செயல்பட முன்வர வேண்டும். *

---

**எங்கோ போய்க்கொண்டிருந்த வழியில், எழுத்தாளனாய் வரவேற்கப்பட்டேன். நான் கதைகள் எழுதிப் பத்திரிகை களுக்கு அனுப்பியதில்லை. என்னைப் பத்திரிகைகள் ஆதரிக்கவில்லை என்று புலம்பியதுமில்லை.**

**நான் கல்லூரியிலோ, உயர்நிலைப் பள்ளியிலோ படித்தவனல்ல, அங்கே எழுத்தையோ இலக்கியத்தையோ கற்பதற்கு! நடைபாதையில், குழாயடியில், சில நாட்கள் வேலைக்குப் போன சிறிய தொழிற்சாலைகளில் பொதுவான நடைமுறை வாழ்க்கையில்தான் இலக்கியத்தைக் கற்றேன். பிறகு, அங்கேதான் எழுத்தும் இலக்கியங்களுமே பிறக்கின்றன என்று அறிந்தேன்.**

•

**கண்டதைச் சொல்லுகிறேன் - உங்கள்**

**கதையைச் சொல்லுகிறேன் - இதைக்**

**காணவும் கண்டு நாணவும் உமக்குக்**

**காரணம் உண்டென்றால் - அவ**

**மானம் எனக்குண்டோ?**

(சினிமாப்பாடல் வரிகள்)

**– 08.04.2015 இல் மறைந்த எழுத்தாளர் ஜெயகாந்தன்**


படிப்பகம்

www.padippakam.com



# சிங்கப்பூரின் தந்தையின் மரணம்!

'சிங்கப்பூரின் தந்தை' என வர்ணிக்கப்படும் லீ குவான் யூ (Lee Kuan Yew) தனது 92ஆவது வயதில் 2015 மார்ச் 23ஆம் திகதி காலமானார். சிங்கப்பூரின் ஆட்சி அதிகாரத்தில் சுமார் 50 வருட காலம் தனிப்பெரும் தலைவராக கோலோச்சியவர் லீ.

716 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 5.3 மில்லியன் சனத்தொகையும் கொண்ட சின்னஞ்சிறிய தென்கிழக்காசிய நாடான சிங்கப்பூரை உலகின் 'முன்னுதாரண' நாடாகக் கட்டியெழுப்பியதில் லீயின் பங்களிப்பு அந்த நாட்டின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாதது.

1965 வரை இன்றைய மலேசியாவுடன் இணைந்து மலேயா என்ற பெயருடன் இருந்த சிங்கப்பூர், 1965இல் தனிநாடாகச் சுதந்திரம் பெற்றது. அதன் முதல் பிரதமராக லீ பொறுப்பேற்றார். அவரது அரசின் முதல் வெளிநாட்டு அமைச்சராக இலங்கையின் வட பகுதியிலுள்ள வட்டுக்கோட்டையில் (தொல்புரம்) பிறந்த சின்னத்தம்பி இராஜரத்தினம் பதவி வகித்தார். சிங்கப்பூரில் சீனர்கள்தான் பிரதான இனமாக இருந்தாலும், தமிழர்களும் - குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களும் கணிசமான அளவு குடியேறி இருந்தனர்.

லீ முதலாவது பிரதமரானதும் சிங்கப்பூரை உலகின் முன்னணி நாடாக மாற்றும் தனது கனவை நனவாக்க திட்டமிட்டு வேலை செய்யத் தொடங்கினார். இதில் ஒரு சுவாரசியமான விடயமும் அடங்கி இருக்கிறது. 1950 களின் நடுக்கூறில் ஒருமுறை லீ இலங்கைக்கு விஜயம் செய்தார். அப்பொழுது இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் அடைந்து (1948) ஏழ அல்லது எட்டு வருடங்களே ஆகியிருந்தது. அன்றைய இலங்கை இருந்த செழிப்பைக் கண்டு 'சிங்கப்பூரை இலங்கை போல ஆக்க வேண்டும்' என எண்ணியிருக்கிறார். ஆனால் இலங்கையின் புற்றுநோயாக இனப்பிரச்சினை மாறியதால் வரலாறு தலைகீழாக மாறிவிட்டது.

பின்னர் 1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. தலைவர் ஜெயவர்த்தன, 'இலங்கையை சிங்கப்பூராக மாற்றிக் காட்டுவேன்' எனச் சொல்லும் அளவுக்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஆனால் லீ தான் நினைத்ததைச் செய்து காட்டினார்.

சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது லீ பின்பற்றிய கடுமையான நிர்வாகக் கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் ஆகும். கிட்டத்தட்ட சிங்கப்பூரில் லீ ஒரு சர்வாதிகார ஆட்சியையே நடாத்தினார். மிக நீண்டகாலம் அவரது ஒரு கட்சி ஆட்சியே அங்கு நிலவியது. அவரது ஆட்சியை எதிர்த்தவர்கள் அல்லது விமர்சித்தவர்கள் அனைவரும் கேட்டுக் கேள்வியின்றி சிறையில் தள்ளப்பட்டனர். அதேபோல பொது ஒழுங்கு விதிகளை மீறுவோரும் கேட்டுக் கேள்வியின்றி தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அதன்மூலம்தான் சிங்கப்பூர் கட்டியெழுப்பப்பட்டது. அவரது ஆட்சியில் எல்லோருக்கும் கல்வி இருந்தது. வேலை இருந்தது. வீடு இருந்தது. வைத்திய வசதி இருந்தது. எல்லாம் இருந்தும் ஏதோ ஒன்று இல்லாமல் இருந்ததை மக்கள் உணர்ந்தார்கள். அதுதான் சுதந்திரம். அதற்கு லீயை துணிச்சலுடன் எதிர்த்து வடிவம் கொடுத்தவர் லீயின் நெருங்கிய சகாவான சின்னத்தம்பி இராஜரத்தினம். அவர்தான் முதல்தடவையாக லீயை எதிர்த்து தேர்தலில் சுதந்திரமாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதல் நபர். அதன் பின்னர்தான் சிங்கப்பூரில் ஓரளவாவது இரு கட்சி முறை உருவானது.

இப்பொழுது சிங்கப்பூரின் பிரதமராக லீயின் மூத்த புதல்வர் லீ சியென் லூங் (Lee Hsien Loong) இருக்கிறார். இப்பொழுது சிங்கப்பூரின் மகிமையும் மழுங்கிவிட்டது. ஆனால் தனது தந்தையைப் போல அவரது ஆட்சியும் கடுமையான கெடுபிடிகள் நிறைந்தே காணப்படுகிறது. உதாரணமாக, லீயின் மரணச் சடங்குகள் நடைபெற்ற மார்ச் 29ஆம் திகதி 17 வயது இளைஞர் ஒருவர் யூ ரியூப்பில் (YouTube) தேசத்தின் ஸ்தாபகத் தலைவர் என வர்ணிக்கப்படும் லீ விமர்ச்சித்து செய்தி ஒன்றை வெளியிட்டார். "இறுதியாக லீ குவான் யூ மரணமானார்" என்ற தலைப்பிலான 8 நிமிட அந்த ஒளிபரப்புக்காக அந்த இளைஞர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இதையும் கூட 'சிங்கப்பூர் உலகின் முன்னோடி' என்ற வகைக்குள் சொல்லலாமோ என்னவோ?

— *தாசன்*

## தோழர் மு.குமாரசாமி எம்மைவிட்டு பிரிந்தார்!

இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தில் 60 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டவரும், இலங்கை தேசிய ஆசிரிய சங்கத்தின் (லங்கா ஜாதிக குரு சங்கமய) தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் வட பிரதேசச் செயலாளராக இருந்தவருமான தோழர் மு.குமாரசாமி, தமது 80ஆவது வயதில் 2015 ஏப்ரல் 12ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது மனைவி நேசமணி அவர்களும் 40 நாட்களுக்கு முன்னர்தான் யாழ்ப்பாணத்தில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.


படிப்பகம்